# "மெய் வாழ்வு"
# REAL LIFE

By

MARVIN TEN KLEY

திருப்தி நிறைந்த மெய்யான வாழ்வு, குடிவெறியிலும், அசுத்தத்திலும், விபசாரத்திலும், வேசித்தனத்திலும் அல்லது வேறெந்த பாவத்திலும், அக்கிரமத்திலும் இஷ்டப்படி ஜீவிப்பதால் கிட்டாது.

இப்படிப்பட்ட சரீர இச்சைகட்கு இடங்கொடுப்பதன் மூலம் திருப்தியடைய விரும்பும் எவனும், அவை திருப்தியளிக்கக் கூடாதவையாயிருந்தபோதிலும் மேன்மேலும் அப்பாவங்களைச் செய்யவே தூண்டுகின்றன என்னும் உண்மையை சீக்கிரத்தில் கண்டுகொள்வான். உதாரணமாகக் குடிவெறியை எடுத்துக்கொள்வோம். குடி வெறியன் ஒருவன், நான் பிறவாதிருந்தால் நலமாய் இருந்திருக்குமே என்று மனமுடைந்து கதறும் அளவுக்குத் தரித்திரத்திலும், துயரத்திலும், நோயிலும், ஏமாற்றத்திலும் குடிவெறி தன்னை அமிழ்த்திப் பாழாக்கி விட்டதை மனதார உணர்ந்தபோதிலும், அக் குடிவெறியிலிருந்து மீளமுடியாமல் மேலும் மேலும் குடித்து அழிகிறான்.

''துரோகிகளுடைய வழியோ கரடு முரடானது''—நீதிமொழிகள் 13:15.

மனித ஜாதியின் தவறுதான் என்ன? எந்த இன்பத்தின் மூலமாயும் அடையக் கூடாத நிரந்தரமான திருப்தியை வாஞ்சித்து நாடும் சுபாவம் மனித ஜாதியின் உள்ளத்தில் இருப்பது ஏன்?

உண்மை என்னவெனில், நாம் யாவரும் தேவ ஐக்கியத்திலிருந்து வீழ்ந்துபோன மனித ஜாதியில் பிறந்திருக்கிறோம். ஆதலால் தன்னையே மீண்டும் மீண்டும் திருப்தி செய்யத் தூண்டும் வீழ்ந்துபோன தன்மை நம்மில் இருக்கிறது. தேவனோடு தொடர்பு இன்றி வீழ்ந்துவிட்டதால், இச்சுபாவத்தின் ஆசைகள் தேவனுக்கு விரோதமாயும் பாவமாயும் இருக்கின்றன. வீழ்ந்துபோன தன்மையின் ஆசைகட்கு நாம் இணங்கினால், அது நம்மைப் பாவத்துக்கும் சஞ்சலத்துக்குமே வழி நடத்தும்.

ஆகவே நம் இயற்கைச் சுபாவத்தின் பலாபலனாகவே நாம் தீய காரியங்களைச் செய்கிறோம். நாம் எவ்வளவு புண்ணியம் செய்தாலும் இந்த இயற்கைத் தன்மையை மாற்றமுடியாது. நல்ல தீர்மானங்களோ, தவமிருத்தலோ, உபவாசித்தலோ, சீர்திருத்தங்களோ, ஞானஸ்நானமோ, சபையில் அங்கத்தினராகுதலோ இப்பாவத் தன்மையை மாற்றவே முடியாது. நிரந்தரமான மெய் வாழ்வு வேண்டுமானால் புனித ஆசைகளோடு கூடிய ஒரு புதிய தன்மை கட்டாயம் வேண்டும்.

# பரிகாரம்

நம்மை சிருஷ்டித்த தேவன் இந்தப் பிரச்னைக்குப் பரிகாரமின்றி நம்மைக் கைவிட்டுவிடாமல்—வழியொன்று வகுத்துள்ளார். அவருடைய திவ்ய சுபாவத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, இழந்துபோன ஐக்கியத்தில் நம்மை மீண்டும் நிலை நிறுத்த இதைத்தவிர வேறு வழி எதுவும் இல்லை. (2 பேதுரு 1:4)

தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து பூமிக்கு வரவும், பரிசுத்த ஆவியினால் ஒரு கன்னிகையின் கர்ப்பத்தில் பிறந்து மாம்ச சரீரத்தை எடுக்கவும் சித்தமானார். சாத்தான் அவரை பலமாய்ச் சோதித்தபோதிலும் அவர் எவ்விதப் பாவமுமின்றி மனித சரீரத்தில் வாசம்பண்ணினார் ''அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக தம் ஜீவனை ஒப்புக்கொடுத்து, தம் இரத்தத்தைச் சிந்தினார். ''இரத்தஞ் சிந்துதல் அல்லாமல் மன்னிப்பு உண்டாகாது''(எபிரேயர் 9:22-26).

''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். (2 கொரிந்தியர் 5:21) ''கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழும்பி நித்திரை அடைந்தவர்களில் முதற் பலனானார்''. (1 கொரிந். 15:20) ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போலக் கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள்.'' (1 கொரிந். 15:22)

''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.'' (யோவான் 3:16).

தேவனுடைய இந்தப் பரிகாரத்தை நீ ஏற்றுக்கொண்டால், நீ மன்னிப்பைப் பெறுவதோடுகூட, அவரைப் பிரியப்படுத்த விரும்பும் ஒரு புதிய சுபாவத்தையும் பெற்றுக்கொள்வாய். பழைய சுபாவத்துக்கு இணங்குவதற்குப் பதிலாக இப்புதிய சுபாவத்துக்கு நீ இணங்கினால், பாவ வழக்கங்களிலிருந்தும், பாவ அடிமைத்தனத்திலிருந்தும் நீ விடுதலை அடைந்து மெய் வாழ்வு பெறுவாய்.

இக்கைப்பிரதியை வாசிக்கும் நண்பரே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேலும் அறிய விரும்பினால் கீழ்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

---

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India